வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

தரம் :- 13 (2019)	கணக்கீடு - I	இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :....................................

- ***01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***
- ***31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***
- **ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் உரித்தாகும்.**
- **உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 – 30	
31 - 50	
மொத்தம்	

agaram.lk

பகுதி - I

01. கணக்கீடு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றை தெரிவு செய்க.

A - கணக்கீட்டின் பிரதான நோக்கம் அக்கறையுடைய தரப்பினருக்கு தீர்மானமெடுத்தலுக்கு தேவையான பயனுள்ள தகவல்களை வழங்கல்.

B - கணக்கீட்டு அலகு என்பது கணக்கீட்டை மேற்கொள்ளும் தனிநபர், நிறுவனம் அல்லது அரசு ஆகும்.

C - கணக்கீட்டுச் சட்டகத்தின்படி அடிப்படை கருதுகோள் வியாபார அலகுசார் எண்ணக்கரு ஆகும்.

1) A மாத்திரம் 2) A B ஆகியன மாத்திரம் 3) A C ஆகியன மாத்திரம்

4) ABC ஆகியன எல்லாம் 5) BC ஆகியன மாத்திரம் (……..…..)

❖ **2,3,4 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிலவன் நிறுவனத்தில் 2019 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற தகவல்களாகும்.

- 2.1.2019 ரூ 25000 கிரயமான பண்டங்கள் ரூ 40000 கடனுக்கு விற்கப்பட்டது.
- 8.1.2019 கடன்பட்டோனால் ரூ 8000 பண்டங்கள் திருப்பப்பட்டன (இவை 2.1.2019 இல் விற்கப்பட்டது)
- 15.1.2019 எதிர்மாற்றல் ரூ 4000
- 25.1.2019 உரிமையாளர் தனது சொந்தப்பணத்திலிருந்து ரூ 12000 தொகையை கடன்கொடுநருக்கு செலுத்தினார் இதன் போது கிடைத்த கழிவு ரூ 3000
- 1.1.2019 இல் உள்ள கணக்கீட்டுச் சமன்பாடு வருமாறு

சொத்து =	மூலதனம் +	பொறுப்பு +	நிறுத்திவைத்தலாபம்
300000	160000	80000	60000

02. 31.1.2019 இல் கொடுக்கல்வாங்கல் இடம்பெற்ற பின்னர் இறுதிக் கணக்கீட்டுச்சமன்பாடு எது?

	சொத்து =	மூலதனம் +	பொறுப்பு +	நிறுத்திவைத்தலாபம்
1)	296000	160000	61000	75000
2)	308000	172000	61000	75000
3)	303000	172000	61000	70000
4)	303000	160000	61000	72000
5)	308000	160000	65000	83000

(……….)

03. 2.1.2019 தொடக்கம் 25.1.2019 வரையான கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கான சரியான மூல ஆவணங்களின் வரிசை எது?

1) விற்பனைப்பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்புகைச்சாத்து, கைச்சாத்து.
2) விற்பனைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புகைச்சாத்து, கைச்சாத்து.
3) விற்பனைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புகைச்சாத்து, பற்றுச்சீட்டு.
4) விற்பனைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புகைச்சாத்து, பட்டியல்.
5) விற்பனைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புகைச்சாத்து, நாட்குறிப்புகைச்சாத்து. (……….)

04. மேற்படி கொடுகல்வாங்கல்களினால் தேறியலாபமும், தேறியசொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு முறையே யாது?

1) ரூ 27000, ரூ 15000 2) ரூ 15000, ரூ 27000 3) ரூ 12000, ரூ 15000
4) ரூ 15000, ரூ 12000 5) ரூ 8000, ரூ 15000 (……….)

05. 1.1.2019 வணிகமொன்றை ஆரம்பித்த ஆதவன் நிறுவனத்தின் ஜனவரி மாத காசுக்கொடுக்கல் வாங்கல் வருமாறு.

காசுப்பெறுவனவு நாளேட்டின் மொத்தம் ரூ 174000
காசுக்கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் ரூ 118000

ஜனவரி மாதத்திற்கு கிடைக்கப்பெற்ற வங்கிக்கூற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு

வங்கியினால் வசூழிக்கப்பட்ட காசோலை ரூ 162000 (நேரடிவைப்பு தவிர)
மாற்றப்பட்ட காசோலை ரூ 101000
நேரடிவைப்பு ரூ 4000
வங்கிக்கட்டனம் ரூ 2000
நிலையியற்கட்டளைக் கொடுப்பனவு ?

ஜனவரி மாத திருத்திய காசுக்கட்டுப்பாட்டு மீதியைவிட காசுக்கட்டுப்பாட்டுமீதி ரூ 5000 ஆல் அதிகம். ஜனவரி மாத நிலையியற்கட்டளை கொடுப்பனவும் ஜனவரி மாத வங்கிக்கூற்று மீதியும் முறையே யாது?

1) ரூ 12000, ரூ 48000 2) ரூ 7000, ரூ 46000 3) ரூ 7000, ரூ 56000
4) ரூ 4000, ரூ 49000 5) ரூ 7000 , ரூ 49000 (……….)

06. வரையறுத்த சைன் கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்பட்டோன் பேரேட்டுப்பட்டியல் மீதி ரூ 74000 ஆகும் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதி உடன்படவில்லை. காரணங்கள் வருமாறு.

- ➢ விற்பனை நாளேடு ரூ 2000 ஆல் கூட்டி கூட்டப்பட்டது.
- ➢ விற்பனைத்திரும்பல் ரூ 3000 விற்பனை திரும்பல் நாளேட்டில் ரூ 300 என பதியப்பட்டது.
- ➢ விதித்தவட்டி ரூ 1300 கடன்பட்டோன் பேரேட்டில் ரூ 3100 என பதியப்பட்டது.
- ➢ கடன்பட்டோன் பேரேட்டிலுள்ள செலவு மீதி ரூ 2000 பட்டியலினுள் வரவு மிதியாக நிரற்படுத்தப்பட்டது. 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுகான திருத்தமுன் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கும், திருத்திய கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கும்.

agaram.lk

	திருத்தமுன் கட்டுப்பாட்டு கணக்கு	திருத்திய கட்டுப்பாட்டுக் கணக்கு
1)	ரூ 72200	ரூ 67500
2)	ரூ 69500	ரூ 64500
3)	ரூ 67500	ரூ 62800
4)	ரூ 70200	ரூ 65500
5)	ரூ 70200	ரூ 62800

(……….)

07. வரையறுத்த சுவீற் உற்பத்திக்கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

மொத்த உற்பத்திக் கிரயம்	ரூ 244000
உற்பத்திக்கூலி	ரூ 32000
உற்பத்திமேந்தலை	ரூ 28000

ஆண்டு காலத்தில் இருப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு வருமாறு

மூலப்பொருள்	ரூ 8000
முடிவுப்பொருள்	ரூ 6000
குறைவேலை	(ரூ 5000)

31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மூலப்பொருள் கொள்வனவும் விற்பனைக்கிரயமும் முறையே யாது?

1) ரூ 187000, ரூ 238000　　2) ரூ 197000, ரூ 238000　　3) 187000, ரூ 244000
4) ரூ 238000, ரூ 187000　　4) ரூ 177000, ரூ 238000　　(……….)

❖ **8, 9, 10 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

வரையறுத்த சீனு கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பரீட்சை மீதி சமப்படவில்லை. இவ்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட வருமானக்கூற்று ரூ 196000 தேறியலாபமாக காட்டியது. பின்னர் பின்வரும் தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

- பேரேட்டில் காணப்பட்ட பெற்ற வட்டி ரூ 5000 பரீட்சை மீதிக்கு கொடுத்தவட்டியாக வரவுக்கு எடுத்துவரப்பட்டது.
- விற்பனைத் திரும்பல் ரூ 3000 விற்பனை நாளேட்டில் பதிவிடப்பட்டது.
- ஆரம்ப இருப்பு ரூ 1000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டது.
- 15% பெறுமதிசேர் வரியை (VAT) உள்ளடக்கிய கடன் விற்பனை ரூ 138000 முழுவதும் விற்பனைக்கணக்கிற்கு மட்டும் செலவிடப்பட்டது.

08. 31.3.2019 இல் பரீட்சை மீதியில் தோன்றக்கூடிய தொங்கல் கணக்கு மிதி யாது?

1) வரவு மீதி ரூ 133000　　2) செலவு மீதி ரூ 133000　　3) வரவு மீதி ரூ 128000
4) வரவு மீதி ரூ 132000　　5) வரவு மிதி ரூ 126000　　(……….)

09. பிழை தவறுகள் சீராக்கப்பட்டபின் சரியான தேறியலாபம் யாது?

1) ரூ 209000　2) ரூ 178000　3) ரூ 196000　4) ரூ 201000　5) ரூ 183000　　(……….)

10. பிழை தவறுகள் சீராக்கப்பட்டபின் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

1) ரூ 13000 ஆல் குறையும்　　2) ரூ 12000 ஆல் குறையும்　　3) ரூ 14000 ஆல் குறையும்
4) ரூ 12000 ஆல் அதிகரிக்கும்　　5) ரூ 13000 ஆல் அதிகரிக்கும்　　(……….)

11. நிறுவனமொன்றின் கடன்பட்டடோரையும் கடன்கொடுநரையும் முறையே சொத்தாகவும் பொறுப்பாகவும் இனம்காணு வகைசெய்யும் எண்ணக்கரு எது?

1) தேறல் எண்ணக்கரு　　2) தொடர்ந்து செல் எண்ணக்கரு
3) அட்டுறு எண்ணக்கரு　　4) பாதுகாப்பு எண்ணக்கரு
5) இணைத்தல் எண்ணக்கரு　　(……….)

agaram.lk

12. கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றை தெரிவு செய்க.

A - இணைத்தல் எண்ணக்கருவின்படி பெறுமானத்தேய்வு வருமானக்கூற்றில் செலவாக காட்டப்படும்.

B - பணத்தின் பெறுமதி எல்லாக்காலங்களிலும் சமனாக காணப்படும் என்பபது பணஅளவீட்டு எண்ணக்கரு ஆகும்

C - கொள்வனவுகளின் ஒரு பகுதியை செலவாகவும் மிகுதியை இருப்பாகவும் காட்டுவது இணைத்தல் எண்கருவின்படியாகும்.

1) A,B யும் 2) B,C யும் 3) A, C யும் 4) A,B, C யும் 5) B மட்டும் (……….)

❖ **13, 14 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

வரையறுத்த சங்கர் கம்பனி VAT க்கு பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு

பொறியின் பட்டியல் விலை	ரூ 400000
பொறிக்கான தீர்வை	ரூ 50000
பெறுமதி சேர்வரி	ரூ 20000
வியாபாரக் கழிவு	ரூ 10000
பொறிபழுதுபார்தல் செலவு	ரூ 30000
பரீட்சார்த்த உற்பத்திக்கட்டனம்	ரூ 60000

பரிட்சாார்த்த உற்பத்தி 200 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ 100 இற்கு விற்கப்பட்டது இப்பொறியின் இழிவுப்பெறுமதி ரூ 20000 பயனுள்ள ஆயுட்காலம் 20 வருடம். 1.4..2018 இருந்து பொறி பயன்பாட்டிற்குவருகின்றது.

13. 31.3.2019 இல் பொறியின மூலதனக்கிரயமாக இனம்காண வேண்டிய தொகை யாது?

1) ரூ 460000 2) ரூ 480000 3) ரூ 520000 4) ரூ 500000 5) ரூ 580000 (……….)

14. 31.3.2019 இல் பொறியின் பெறுமானத்தேய்வும் பொறியின் முன்கொண்டுவரும் தொகையும். முறையே யாது?

1) ரூ 23000, ரூ 457000 2) ரூ 24000, ரூ 456000 3) ரூ 23000, ரூ 437000

4) ரூ 25000, 475000 5) ரூ 26000 , ரூ 526000 (……….)

agaram.lk

❖ **15, 16, 17 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

பங்குடைமையொன்றில் பாணு, வேணு, சீனு என்போர் பங்குடைமையொன்றில் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என்ற அடிப்படையில் இலாபநட்டங்களை பகிரும் பங்காளர்கள். இப்பங்குடைமையிலிருந்து 1.4.2018 இல் சீனு இளைப்பாறினார். நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்பட்டது. பங்காளர் மூலதனக்கணக்கிற்கு ஆண்டுக்கு 10% வட்டி வழங்கப்பட வேண்டும். இளைப்பாறும் பங்காளருக்கு செலுத்தவேண்டிய தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

31.3.2019 இல் முடிவடைந்த தினத்தில் உள்ள மீதிகள்

	பாணு ரூ 000	**வேணு ரூ 000**
மொத்த உரிமை	1610	1190
நடைமுறைக் கணக்கு	510	290

1.4.2008 இல் பங்காளர் நடைமுறைக் கணக்கு மீதிகள்

பானு	400000 (செலவு)
வேணு	200000 (செலவு)
சீனு	100000 (வரவு)

31.3.2019 இல் சீனு கடன் ரூ 900000, 1.4.2018 இல் சீனு மூலதனக் கணக்கு ரூ 800000 ஆகும். 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பற்றுக்கள் பாணு, வேணு முறையே ரூ 300000, ரூ 200000 ஆகும்

15. பங்குடைமையின் மொத்த நன்மதிப்பு யாது ?

1) ரூ 500000 2) ரூ 200000 3) ரூ 100000 4) ரூ 1000000 5) ரூ 2000000 (……….)

16. 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம்.

1) ரூ 500000 2) ரூ 200000 3) ரூ 700000 4) ரூ 400000 5) ரூ 300000 (……….)

17. 1.4.2018 இல் பங்குடைமையின் மொத்த உரிமையாண்மை யாது?

1) ரூ 2400000 2) ரூ 2800000 3) ரூ 4000000 4) ரூ 3000000 5) ரூ 3500000 (……….)

18. சாள்ஸ் பொதுக்கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கு 25.5.2019 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன 31.3.2019 இலிருந்து 25.05.2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகள் வருமாறு.

A - இக்காலப்பகுதிக்குள் முதலீட்டின் சந்தை விலை ரூ 25000 ஆல் வீழ்ச்சியடைந்தது.

B - 10.5.2019 இல் விபாரத்திற்கு சொந்தமான ரூ 500000 நிலத்தின் ஒரு பகுதியை அரசு ரூ 300000 விலையில் சுவீகரித்தல்.

C - 31.3.2019 இல் ரூ 200000 கிரயமுடைய சரக்கு 21.5.2019 இல் ரூ 180000 இற்கு விற்கப்பட்டது.

D - 12.05.2019 ஏற்பட்ட தீ விபத்தில் 31.3.2019 இல் உள்ள ரூ 24000 பண்டங்கள் தீயினால் அழிக்கப்பட்டது.

LKAS 10 இன்படி 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க **தேவையற்ற நிகழ்வுகள்** எவை,

1) ABC மாத்திரம் 2) ABD மாத்திரம் 3) BD மாத்திரம்

2) C மாத்திரம் 5) ABCD எல்லாம் (……….)

❖ வரையறுத்த சாம்கோ கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

விபரம்	ரூ 000
விற்பனை	3200
விற்பனைக் கிரயம்	1500
நிர்வாகச் செலவு	800
மோட்டார் விற்பனைலாபம்	100
செலுத்திய பங்குலாபம்	200
காணி மீள்மதிப்பீட்டு மிகை	500
பொறி மதிப்பீட்டு பற்றாக்குறை	200

31.3.2017 இல் பொறியானது ரூ 150000 கூட்டி மீளமதிப்பிடப்பட்டிருந்தது. காணி 31.3.2019 இல் முதல்தடைவையாக கூட்டி மீளமதிப்பிடப்பிடப்பட்டது.

19ம் 20ம் 21ம் வினாக்களுக்கு விடை தருக.

19. இலங்கை கணக்கீட்டு LKAS 1 நியமத்தின்படி 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தவருமானம், மொத்தச்செலவு எவை?

	மொத்தவருமானம் ரூ 000	மொத்தச்செலவு ரூ 000
1)	3500	1400
2)	2500	1400
3)	2600	2000
4)	3800	2500
5)	2800	2500

(……….)

20. LKAS 1 இன்படி 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கு இனம்கானப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் யாது?

	இலாபம் ரூ 000	ஏனையமுற்றுமடங்கிய வருமானம் ரூ 000
1)	1050	500
2)	1000	350
3)	750	300
4)	1050	500
5)	950	350

(……..…..)

21. LKAS 1 இன்படி 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கு நிறுத்திவைத்தலாபம் மற்றும் மொத்தமுற்றுமடங்கிய வருமானம் யாது?

	நிறுத்திவைத்தலாபம் ரூ 000	மொத்தமுற்றுடங்கியவருமானம் ரூ 000
1)	750	1300
2)	950	1100
3)	850	1000
4)	1050	1000
5)	750	1100

(……..…..)

- வரையறுத்த சைய்தி கம்பனியின் ஏடுகளில் 31/3/2019 இல் உள்ள சில மீதிகள் வருமாறு

இலாபநட்டக்கணக்கு	ரூபா	150000
பொது ஒதுக்கம்	ரூபா	105000
@ 20 கூறப்பட்டபங்கு மூலதனம்	ரூபா	600000
காணி மறுமதிப்பீட்டு ஒதுக்கம்	ரூபா	20000
10% தொகுதிக்கடன்	ரூபா	200000

31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டில் இடம்பெற்ற தகவல்கள் வருமாறு

அ) பொது ஒதுக்கீட்டிற்கு ரூபா 25000 மாற்றப்பட்டது.

ஆ) ஆரம்பத்திலுள்ள ஒவ்வொரு 3 பங்குக்கும் ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ 20 விலையில் நிறுத்திவைத்தவருவாயை மூலதனமாக்கியது

இ) இடைக்காலப் பங்குலாபம் 20000 வழங்கப்பட்டது

ஈ) காணி இவ்வாண்டு ரூபா 80000 ஆல் குறைத்து மறுமதிப்பிடப்பட்டது. இக்காணி சென்றாண்டு 1ம் தடவையாக ரூ 100000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டது.

உ) 18/19 நிதியாண்டுக்கு மதிப்பிடப்பட்ட வரி ரூ 40000

ஊ) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் ரூபா 180000

➢ **இதன் அடிப்படையில் 22, 23, 24 ம் வினாக்களுக்கு விடை தருக**

22. 1.4.2018 இல் உரிமை மூலதனம் யாது?

1) ரூ 1125000 2) ரூ 925000 3) ரூ 800 000 4) ரூ 715000 5) ரூ 735000 (……..…..)

23. 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வரிக்கு முன்லாபம் யாது?

1) ரூ 140000 2) ரூ 220000 3) ரூ 300 000 4) ரூ 260000 5) ரூ 320000 (……..…..)

24. 31.3.2019 முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

1) ரூ 180000 2) ரூ 200000 3) ரூ 140 000 4) ரூ 150000 5) ரூ 160000 (……..…..)

agaram.lk

❖ வரையறுத்த லவன் கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

	ரூபா
ஆண்டுக்கான இலாபம்	54000
18/19ம் நிதியாண்டுக்கானவரி	18000
ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு	6000
செலுத்திய வட்டி	5000
இருப்புக் குறைவு	12000
நீண்டகாலக்கடன் பெறுகை	100000
செலுத்திய பங்குலபம்	30000
1.4.2018 இல் காசும் காசுக்கு சமனானதும்	158000
31.3.2019 இல் காசும் காசுக்கு சமானவையும்	215000
31.3.2019 இல் வரிப்பொறுப்பு ரூ	8000

➢ **25, 26ம் வினாக்களுக்கு விடை தருக**

25. செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசோட்டம் யாது?

1) ரூ 75000 2) 90000 3) 70000 4) 85000 5) 80000 (……….)

26. முதலீட்டு நடவடிக்கையிலான தேறிய காசோட்டம் யாது?

1) ரூ 93000 2) (93000) 3) 85000 4) (87000) 5) 57000 (……….)

❖ வரையறுத்த ராம்கி கம்பனியின் M என்ற பொருளுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

அலகுக்கான முதற்கிரயம் ரூ 240

அலகுக்கான உற்பத்திக்கிரயம் ரூ 330

அலகுக்கு உறிஞ்சப்பட்ட மேந்தலை P திணைக்களத்தில் ரூ 60

Q திணைக்களத்தில் ?

அலகுக்கு ஏற்பட்ட உண்மை நிமிடங்கள் P திணைக்களத்தில் 30 நிமிடங்கள் இயந்திர நேரம்

அலகுக்கு ஏற்பட்ட உண்மை நிமிடங்கள் Q திணைக்களத்தில் 20 நிமிடம் ஊழிய நேரம்

P திணைக்களத்தில் பாதிடப்பட்ட இயந்திர மணி 8000 மணி

Q திணைக்களத்தில் பாதிடப்பட்ட ஊழிய மணி 5000 மணி

agaram.lk

➢ **மேற்படி தகவல்களில் இருந்து 27ம், 28 ம் வினாக்களுக்கு விடை தருக.**

27. P திணைக்களத்தின் பாதிடப்பட்ட மேந்தலை யாது?

1) ரூ 1040000 2) ரூ 780000 3) ரூ 240000 4) ரூ 960000 5) ரூ 480000 (……….)

28. Q திணைக்களத்தின் ஊழிய மணி உறிஞ்சுதல் விகிதம் யாது?

1) ரூ 15 2) ரூ 120 3) ரூ 90 4) ரூ 20 5) ரூ 10 (……….)

29. எல்லைக் கிரயவியல் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றுக்களை தெரிவு செய்க.

A - சமப்பாட்டுப் புள்ளியில் மொத்தப் பங்களிப்பு நிலையான செலவுக்குச் சமனாகும்.

B - பாதுகாப்பு எல்லை அலகுகளை அலகுக்கான பங்களிப்பு பெறுமதியால் பெருக்குவதன் மூலம் பெறப்படுவது இலாபத்திற்கு சமனாகும்.

C - பாதுகாப்பு எல்லையில் செயற்படும் நிறுவனம் எப்போதும் இலாபத்தை உழைத்துக்கொள்ளும்.

D - பங்களிப்பு வீதத்தினதும் மாறும் கிரய வீதத்தினதும் கூட்டுத்தொகை நூறு வீதத்திற்கு சமனாக காணப்பட மாட்டாது.

1) A,B ஆகியன 2) ABC ஆகியன 3) B,C ஆகியன

4) BCD ஆகியன 5) ABCD ஆகியன (……….)

30. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் பின்வருவனவற்றுள் எவை செயற்றிட்டமொன்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியில் குறைவினை ஏற்படுத்தும்.

A – ஆரம்ப முதலீடு அதிகரித்தல் B – சொத்தின் எஞ்சிய பெறுமதியில் ஏற்படும் குறைவு

C – வட்டி வீதம் குறைவடைதல். D – காசு வெளிப்பாய்ச்சல் குறைவடைதல்

1) AB ஆகியன மாத்திரம் 2) BCD ஆகியன 3) ACD ஆகியன (……….)

4) ABCD ஆகியன 5) CD ஆகியன

➢ **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையை புள்ளிக் கோடுகளில் எழுதுக.**

31. பின்வரும் உருப்படிகள் பொருத்தமான நிதிக்கூற்றின் மூலத்திலும் கூறுகளிலும் பட்டியலிடுக.

உருப்படிகள்	**மூலம்**	**கூறுகள்**
A நிறுத்திவைத்த லாபம்	………………………..	……………………………
B உத்தரவாதத்திற்கான ஏற்பாடு	……………………….	…………………………….

32. ரூ 300000 பட்டியல் விலையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களுக்கு 20% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் இக்கடனில் 2/3 பகுதி 10% கழிவுடன் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் தோன்றக்கூடிய கணக்கு மீதிகள் என்ன?

கொள்வனவுக் கணக்கு ரூ ……………………………………………………

பெற்ற காசுக் கழிவு ரூ ……………………………………………………

கடன்கொடுநர் கணக்கின் இறுதிமீதி ரூ ……………………………………………..

செலுத்திய காசு ரூ ……………………………………………..

33. ரூ 200,000 கிரயமானபொருள் ரூ300 000 பட்டியல் விலையில் 20% வியாபாரக் கழிவில் கடனுக்கு விற்கப்பட்டது. இதன்போது ஏற்பட்ட விளம்பரச் செலவு ரூ 6000 கடன்பட்டோரிடமிருந்து 2/3 பகுதி 10% கழிவு தள்ளி காசு பெறப்பட்டது. இதன்போது ஏற்பட்ட பின்வரும் மீதிகள் யாது?

மொத்தச் செலவு ……………… மொத்த வருமானம் ……………… இலாபம் …………………

34. பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, என்பவற்றின் மீது ஏற்படுத்தும் **தேறிய** தாக்கத்தினை அதிகரிப்பு (**I**) குறைவு (D) மாற்றமில்லை (**NC**) என்பவற்றின் மூலம் காட்டுக.

கொடுக்கல் வாங்கல்கள்	சொத்து	பொறுப்பு	உரிமை
A- கடன்பட்டோரிடம் ரூ 1000 கழிவு தள்ளி ரூ 4000 காசு பெறப்பட்டது	……………..	…………	…………
B- ரூ 12000 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.	………………	…………..	…………….
C- ரூ 10000 பண்டங்கள் ரூ 15000 கடனுக்கு விற்கப்பட்டது.	………………	…………..	………….

35. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்புபடும் மிக பொருத்தமான எண்ணக்கரு.

A – ஒன்றுக்கு மேற்பட்ட வருடங்களுக்கு பயன்படக்கூடிய குறைந்த பெறுமதியுடைய சிறுகருவி வருமானக்கூற்றில் செலவாக காட்டப்பட்டது.

B – சொத்துக்களை நடைமுறை, நடைமுறையல்லாச் சொத்து என வகைப்படுத்தப்படுகின்றது.

C– இருப்புக்கள் அவற்றின் கிரயப் பெறுமதியைவிட தேறிய தேறத்தக்க பெறுமதி குறைவாக காணப்படும்போது குறைந்த பெறுமதியில் இருப்பை மதிப்பிடல்.

D – ஏற்படக்கூடிய சாத்தியமான உத்தரவாத கோரிக்கை தொடர்பில் ஏற்பாடு ஒன்று செய்யப்படல்.

agaram.lk

விடயம் **எண்ணக்கரு**

A ……………………………………

B ……………………………………

C ……………………………………

D ……………………………………

36. வரையறுத்த காகிள்ஸ் கம்பனியில் 31.32019 இல் M என்ற இருப்பு தொடர்பான தகவல்கள் வருமாறு

இருப்பின் வகை	**அலகு எண்**	**அலகுகொள் வனவு கிரயம்**	**மாற்றல் கிரயம்**	**அலகு விலை**	**நேரடி விற்பனை செலவு**
M1	1000	40	10	52	3
M2	800	24	6	40	5
M3	1500	25	6	34	4

அ) உருப்படி ரீதியாக கணிக்கப்பட்ட 31.3.2019 இல் உள்ள இருப்பின் பெறுமதி யாது?

……………………………………………………………………………………………

ஆ) இருப்பை பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவை தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

37. வரையறுத்த சிம்கோ கம்பனியில் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுடன் தொடர்புடைய கடன்கொடுநர் தொடர்பான பிழைதவறுகள் வருமாறு. இவற்றுக்கான சீராக்கத்தை பெறுமதிகளுடன் கட்டுப்பாட்டு கணக்கிலும் பட்டியலிலும் திருத்தம் செய்து காட்டுக.

பிழை தவறுகள்	**கட்டுப்பாட்டுக் கணக்கில் செய்ய வேண்டிய திருத்தம்**	**பட்டியலில் செய்யவேண்டிய திருத்தம்**
கொள்வனவுத் திரும்பல் ரூ 5000 கொள்வனவு நாளேட்டில் 500 என பதியப்பட்டது	………………………………	………………………………
மதிப்பிழந்த காசோலை ரூ 2000 கடன்கொடுநர் பேரேட்டில் ரூ 200 வரவிடப்பட்டது	………………………………	………………………………
விதித்தவட்டி ரூ 3000 பொதுப்பேரேட்டிலுள்ள கணக்குகளில் இருதடவை பதியப்பட்டது	………………………………	………………………………

38. தோற்பைகளை உற்பத்தி செய்யும் கமலா கம்பனி செலவுகள் நேர் அல்லது நேரில் என வகைப்படுத்துவதுடன் மாறும் அல்லது நிலையானது என வகைப்படுத்தி இவை பொருட்கிரயத்தில் உள்ளடக்கப்படுமா என கூறுக.

செலவுகள்	நேர்/நேரில்	மாறும்/நிலையானது	உற்பத்திக் கிரயம் (ஆம்/இல்லை)
1. பதனிடப்பட்ட தோல்	………………	………………	………………
2. உற்பத்திக்கூலி	………………	………………	………………
3. தொழிற்சாலை வாடகை	………………	………………	………………
4. பைகளுக்கான பட்டின்	………………	………………	………………

agaram.lk

39. விடுதலை விளையாட்டுக்கழகத்தின் 31.3.2019 இல் முடிவடைந்த நியாண்டுக்கான தகவல்கள் தரப்படுகின்றது. திரண்டநிதி, கட்டிட நிதி, ஆண்டுக்கான மிகை என்பவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை அதிகரிப்பு (**I**) குறைவு (**D**) மாற்றமின்மை (NC) என்பவற்றின் மூலம் எடுத்துக்காட்டுக.

தகவல்கள்	**திரண்ட நிதி**	**கட்டிட நிதி**
ஆண்டுக்கான மிகையிலிருந்து ரூ 10000 கட்டிட நிதிக்கு மாற்றல்	………………..	……………………
கட்டிட நிதி நிலையான வைப்பில் முதலிடல்	………………..	……………………
நிலையானவைப்பு முதிர்ச்சியுடன் வட்டி வருமானம் பெறல்	………………….	………………….
கட்டிட நிதியை பயன்படுத்தி கட்டிடத்தை முழுமையாக கட்டி முடித்தல்	………………….	…………………..

➢ ஒரு பங்குடைமையில் புத்தன் , யேசு என்போர் இலபாநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள். இவர்களது பங்குமையின் பங்காளர் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு மூலதனவட்டி முறையே ரூ 12000, ரூ 10000 ஆகும் பங்காளர் ஆரம்ப மூலதனமீதிக்கு ஆண்டுக்கு 5% வட்டிக்கு உரித்துண்டு யேசுவுக்கு ஆண்டுச் சம்பளமாக ரூ 15000 க்கு உரித்துண்டு. ஆண்டுகாலத்தில் புத்தன் ரூ 5000 தொகையை பற்றினார். ஆண்டு காலத்தில் மேலதிக மூலதனம் ஈடுபடுத்தப்படவில்லை.

ஆரம்ப இறுதி நடைமுறைக்கணக்கு மீதிகள் முறையே

	31.3.2019	1.4.2018
புத்தன்	49000	12000
யேசு	40000	(5000)

➢ **40, 41 ம் வினாக்களுக்கு விடை தருக.**

40. பகிர்வுக்கு உட்படுத்தக்கூடிய மொத்த இலாபம் என்ன?

………

agaram.lk

41. 31.3.2019 இல் மொத்த உரிமை யாது?

………

42. பின்வரும் நிகழ்வுகள் **LKAS 08** இன்படி மதிப்பீட்டு மாற்றமா கொள்கை மாற்றமா என்பதை குறிப்பிடுக

நிகழ்வுகள்	மதிப்பீட்டு மாற்றம்/ கொள்கை மாற்றம்
A - பெறுமானத் தேய்விடல் முறையில் ஏற்படும் மாற்றம்	………………………………………
B - வரி மதிப்பீட்டு முறையில் ஏற்படும் மாற்றம்	………………………………………
C - சொத்தின் தேறிய பெறுமதியில் ஏற்படும் மாற்றம்.	………………………………………
D - FIFO முறைக்குப் பதிலாக LIFO முறையை பயன்படுத்தல்.	………………………………………

43. வரையறுத்த லாரா கம்பனியின் 2019 மார்ச் மாத தகவல்கள் வருமாறு.

திகதி	விபரம்	அலகுகள்	அலகுகிரயம்
1.3	மீதி	4000	30
15.3	கொள்வனவு	6000	20
25.3	விற்பனை	?	
31.3	மீதி	3000	-

நிறுவனம் நிறையளித்த சராசரி முறையில் இருப்பு மதிப்பிடப்பிடுகின்றது 31.3.2019 இல் உள்ள இருப்பின் அலகுக்கான தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூ 21 எனின்.

அ) விற்பனைக் கிரயம் யாது?

……..

ஆ) 31.3.2019 நிதி நிலைமைக் கூற்றில் காட்டவேண்டிய இருப்பின் பெறுமதி யாது?

…….

44. வரையறுத்த சுமங்கலி கம்பனியின் பொருள் ஒன்றுடன் தொடர்பான தகவல்கள் வருமாறு
சிக்கனக்கட்டளைத் தொகை 800 அலகுகள்
கட்டளையொன்றிற்கான கட்டளையிடும் செலவு ரூ 8.00
அலகொன்றிற்கான பராமரிப்புச் செலவு ரூ 0.50 சதம்

அ) இருப்பின் வருடாந்த கேள்வி யாது?

……..

ஆ) சிக்கன கட்டளை மட்டத்தில் இருப்புக்கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய மொத்தச் செலவை கீழ்வரும் அட்டவணையில் நிரப்புக.

கட்டடளையிடும் செலவு ……………………….
பராமரிப்புச் செலவு ……………………….
மொத்தச் செலவு ……………………….

❖ 1.4.2018 இல் வரையறுத்த சம்சாரம் கம்பனி ரூ 400000 கிரயமான பொறியொன்றை 5 வருட குத்தகையின் கீழ் பெற்றுக் கொண்டது. பொறியின் பயன்பாட்டு ஆயட்காலம் 6 வருடங்கள் குத்தகை காலமுடிவில் சொத்தின் உரிமை குத்தகைக்கு எடுத்தவனுக்கு கைமாற்றப்படாது. உடனடிக் கொடுப்பனவாக ரூ 80000 செலுத்தப்பட்டதுடன் வருடாந்தம் நிலையாக தவணைக்கட்டணமாக வட்டி உட்பட ஒவ்வொரு நிதிவருட இறுதியிலும் ரூ 80000 செலுத்தப்படும். குத்தகை வட்டி ஆண்டுக்கு 10% ஆகும். நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுகின்றது.

agaram.lk

➢ **45 46 ம் வினாக்களுக்கு விடை தருக**

45. சம்சாரம் கம்பனியின் 31.3.2019 இல் நிதிநிலைமைக் கூற்றில் தோன்றக்கூடிய மீதிகளை கீழ்வரும் அட்டவணையில் காட்டுக.

அ) நடைமுறையல்லாச் சொத்து கிரயம் தி.பெ.தே மு.கொ.வ.தொகை

…………………………………… …………. ……………. ………………..

ஆ) நடைமுறையல்லாப் பொறுப்பு …………………….

இ) நடைமுறைப் பொறுப்பு ……………………

46. 31.3.2019 இல் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

………

❖ **கம்சியா கம்பனியின் 2019 மே மாதத்துடன் தொடர்புடைய இரு ஊழியர்கள் தொடர்பான சம்பள விபரம் வருமாறு**

ஊழியர் பெயர்	வாழ்க்கைச் செலவு படி ரூபா	கடன் அறவீடு ரூபா	ஊழியரது EPF அறவீடு	தேறிய சம்பளம் ரூபா
சேரன்	8000	3000	10%	15000
சோழன்	6000	2000	10%	25000

47. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மொத்தச் சம்பளத்தில் ஊழியர் 10% தொழில் கொள்வோன் 15% பங்களிப்பு செய்கின்றனர்.

அ) மே மாதத்திற்கான ஊழியர்களது மொத்தச் சம்பளம் யாது?

……………………………………………………………………………………………………..

ஆ) மே மாதத்திற்கான அடிப்படைச் சமபளங்களின் மொத்தம் யாது?

………………………………………………………………………………………………………

இ) 2019 மே மாதத்திற்கான ஊழியர் சார்பான மொத்தச் செலவு யாது?

………………………………………………………………………………………………………

48. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என கூறு.

	சரி/பிழை
A) பங்காளர் பங்குடைமைக்கு வழங்கிய கடன் தொடர்பில் செலுத்தவேண்டிய கடன்வட்டி பங்குடைமையின் உரிமையைக் குறைக்கும்	……………….
B) இருப்பு வைத்திருத்தல் காலத்தில் ஏற்படும் அதிகரிப்பு நிறுவனத்தின் வினைத்திறனான இருப்புக் கட்டுப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.	……………….
C) பங்கொன்றிற்கான உழைப்பு அதிகமாக காணப்படின் குறுகிய காலத்தில் முதலீட்டை திரும்ப பெறலாம்	………………
D) நடைமுறை விகிதம் 2:1 என காணப்படும் போது ரூ 20000 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யும்போது நடைமுறை விகிதம் அதிகரிக்கும்	……………….

49. சைன் கம்பனி தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்து அலகொன்று ரூ 20 விலையில் விற்பனை செய்கின்றது. 4000 அலகுகள் விற்பனை செய்யும்போது அலகொன்றுக்கு ரூ 4.50 நட்டம் ஏற்படும். 8000 அலகுகள் விற்பனை செய்யும்போது அலகொன்று ரூ 1.75 இலாபம் அடையும். பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) மொத்த நிலையான கிரயம் ரூ ……………………………………………..…

ஆ) அலகொன்றிற்கான பங்களிப்பு ரூ ……………………………………….………

இ) சமப்பாட்டு புள்ளி அலகுகள் ……………………………………………..….

50. ரூபா 200000 பொறியில் முதலீடு செய்துள்ள கம்பனியின் பயனள்ள ஆயுட்காலம் 5 வருடம் இழிவுப்பெறுமதி ரூ 40000 முதல் ஐந்து வருடங்களில் காசோட்டம் முறையே ரூபா 90000, ரூபா 80000, ரூபா 60000, ரூபா 50000, ரூபா 30000, காசோட்டமாக பெற்றுள்ளது.

அ) சாராசரி முதலீட்டு திரும்பல் வீதம் யாது?

……………………………………………………………………………………………………..

ஆ) முதலீட்டு திரும்பல் காலம் யாது?

………………………………………………………………………………………………………

(50x4 =200 புள்ளிகள்)

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, யூன் - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

தரம் :- 13 (2019)	கணக்கீடு - II	மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்

அறிவுறுத்தல்கள் :-

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
- உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

வினா இல 01

வரையறுக்கப்பட்ட மேர்வின் கம்பனியின் 31.3.2019 இல் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு

விபரம்	வரவு ரூ 000	செலவு ரூ 000
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்		48000
பொதுஒதுக்கம்		3000
1.4.2018 இல் நிறுத்திவைத்தலாபம்		8000
விற்பனை		25000
விற்பனைக்கிரயம்	14000	
நிர்வாகச் செலவு	1800	
விநியோகச் செலவு	1400	
1.4.2018 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடு		300
1.4.2018 இறுதிக்காலண்டு வருமான வரி ஏற்பாடு		80
செலுத்திய வருமானவரி	240	
சென்மதி நிர்வாகச் செலவுகள்		120
வியாபார வருமதி	360	
வியாபார சென்மதி		200
1.4.2018 வி.வருமதி எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கம்		60
31.3.2019 இல் இருப்பின் கிரயம்	340	
ஆதனம் பொறி உபகரணங்களின் முன்கொண்டுவரும் தொகை	44800	
வங்கிக் கடன்		2000
நிதிக்கிரயம்	160	
15% நீண்டகால வங்கி நிலையான வைப்பு	5000	
ஏனைய வருமானம்		900
குத்தகை கடன்கொடுநர்	3800	
ஏனைய செலவு	1420	
காசும் காசுக்கு சமனானவையும்	14340	
	87660	**87660**

மேலதிக தகவல்கள் :-

31.3.2019 முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது பினவரும் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும்.

1) 31.3.2019 இல் உள்ளபடியான இருப்பின் கிரய விபரம் வருமாறு.

இருப்பின் வகை	எண்ணிக்கை	அலகுக் கிரயம்	மொத்தக் கிரயம்
M1	2000	ரூ 120	ரூ 240000
M2	1000	ரூ 100	ரூ 100000
			ரூ 340000

இருப்புக்கள் கிரயத்தில் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டது. இவற்றின் தேறிய தேறத்தக்க பெறுமதிகள் முறையே M1 அலகொன்றிற்கு ரூ 150 M2 அலகொன்றிற்கு ரூ 80 ஆகும்.

agaram.lk

2) நிர்வாகச் செலவு ஊழியருக்கு செலுத்திய தேறிய சம்பளம் ரூ 900 000 உள்ளடக்கியுள்ளது. EPF இற்கு ஊழியர் 10% தொழில்கொள்வோன் 15% பங்களிப்புச் செய்கின்றனர். ETF தொழில்கொள்வோன் பங்களிப்பு 5% ஆகும். எனினும் நடைமுறையாண்டிற்கான EPF, ETF பங்களிப்பு தொர்பில் கணக்குகளில் பதியப்படவுமில்லை செலுத்தப்படவுமில்லை.

3) 31.3.2019 இல் ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான மீதிகள் வருமாறு.

சொத்துக்கள்	ஆயுட்காலம்	கிரயம்/மதிப்பிட்ட பெறுமதி ரூபா 000	தி.பெ.தே.ஒ ரூ 000	முன்.கொ.தொகை ரூ 000
காணி	-	15000	-	15000
கட்டிடம்	50	20000	3200	16800
மோட்டர் வாகனம்	12	12000	3000	9000
உபகரணம்	10	8000	4000	4000
		55000	10200	44800

4) மோட்டார் வாகனம் பொருள் விநியோகத்திற்கு பயன்படுவதுடன். ஏனைய சொத்துக்கள் நிர்வாக தேவைக்கு பயன்படுத்தப்படுகின்றது. மேற்படி சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையில் இவ்வாண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்குகளில் முறையாக பதியப்பட்டது.

5) காணி 31.3.2017 இல் முதல்தடவையாக ரூ 15000 000 பெறுமதியில் மதிப்பிடப்பட்டது. இதன்போது ஏற்பட்ட மறுதிப்பீட்டு குறைவு ரூ 2000 000 ஆகும். 31.3.2019 இல் இக்காணி 2ம் தடவையாக ரூ 20 000 000 பெறுமதியில் மதிப்பிடப்பட்டது. இவ்வாண்டுக்கான மறுமதிப்பீடு தொடர்பில் பதிவுகள் எவையும் ஏடுகளில் இடம்பெறவில்லை.

6) 1.4.2018 இல் மோட்டார் வாகனத்தின் ஆயுட்காலம் மீள்மதிப்பிட்போது இத்தினத்திலிருந்து இதன் எஞ்சிய ஆயட்காலம் இரண்டு ஆண்டுகளினால் குறைவடைந்துள்ளது என கண்டறியப்பட்டது. இம் மதிப்பீட்டு மாற்றம் எதுவும் கவனத்தில் கொள்ளப்படாது. இவ்வாண்டுக்கான பெறுமானத் தேய்வுக்கு கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் மோட்டார் வாகன சேர்ப்பனவோ, அகற்றளோ இடம்பெறவில்லை.

7) 31.3.2019 இல் கட்டிடம் 1ம் தடைவையாக ரூ 16000 000 பெறுமதியில் மறுதிப்பிடப்பட்டது. இம் மதிப்பீடு தொடர்பில் செய்யப்பட வேண்டிய எதுவித சீராக்கப்பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

8) 1.4.2014 இல் ரூ 2000 000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணமொன்று 1.10.2018 இல் ரூ 1400 000 விலையில் விற்கப்பட்டது. இதனால் உண்டான இலாபம் ஏனைய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டது. இது தொடர்பில் அனைத்துப் பதிவுகளும் கணக்குகளில் முறையாக பதியப்பட்டது. மிகுதி ஏனைய வருமானம் அனைத்தும் காசாக பெறப்பட்ட நிலையான வைப்பு வட்டியை உள்ளடக்கியுள்ளது.

9) 17/18 நிதியாண்டின் இறுதிக் காலாண்டு வருமான வரிக்கு ரூ 100 000 இணங்கப்பட்டு செலுத்தப்பட்டதுடன். 18/19 நிதியாண்டின் இறுதிக் காலாண்டு வருமானவரிக்கு ரூ 120 000 மதிப்பிடப்பட்டது.

10) விற்பனை ஒரு வருட உத்தரவாத அடிப்படையில் செய்யப்படுகின்றது சென்றான்டு உத்தரவாதம் தொடர்பில் இவ்வாண்டில் செலுத்தப்பட்ட ரூ 400 000 விநியோகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.3.2019 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடாக இவ்வாண்டு விற்பனையில் 1% ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

11) கம்பனி 1.4.2018 இல் பொறியொன்றை ரூ 10 000 000 விலையில் 5 வருட குத்தகையில் கொள்வனவு செய்தது. உடனடிக் கொடுப்பனவாக ரூ 2000 000 செலுத்தப்பட்டதுடன். வருடாந்தம் நிலையான தவனைக்கொடுப்பனவாக வட்டி உட்பட வருட இறுதியில் ரூ 1800 000 செலுத்தப்படும். பொறியின் பயன்பாட்டு ஆயுட்காலம் 6 வருடங்கள் குத்தகை காலமுடிவில் சொத்தின் உரிமை குத்தகைக்கு எடுத்தவனுக்கு கைமாற்றப்படமாட்டாது. செலுத்தப்பட்ட உடனடிக்கொடுப்பனவும், இவ்வாண்டுக்கான தவனைக்கட்டனமும் காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கிலிருந்து குத்தகை கடன்கொடுநர் கணக்கிற்கு வரவிடப்பட்டதை தவிர வேறு பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை. இரண்டு ஆண்டுக்கான குத்தகை வட்டி வருமாறு.

ஆண்டு	குத்தகை வட்டி ரூபா 000
18/19	250
19/20	150

12) பொது ஒதுக்கீட்டிற்கு ரூ 200 000 மாற்றீடு செய்வதுடன். வருட இறுதியில் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் 50000 பங்குகள் நிறுத்திவைத்தலாத்தை பயன்டுத்தி மூலதனமாக்கப்பட்டது. வங்கிக் கடனில் ½ பகுதி 31.3.2020 இற்குள் செலுத்தப்படல் வேண்டும்.

13) 31.3.2019 இல் வியாபார வருமதிகளில் ரூ 50000 தெகையை எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிஒதுக்கத்தை மேற்கொள்க.

வேண்டப்படுவது

LKAS 1 இன்டிபடி பிரசுரிக்கத்தக்க வகையில் பின்வரும் நிதிக் கூற்றுக்கள்.

1) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக் கூற்று
2) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமை மாற்றக் கூற்று
3) 31.3.2019 இல் உள்ளபடி நிதி நிலைமைக் கூற்று

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 02

அ) வரையறுத்த சிரான் கம்பனி இயந்திரப் பகுதி, முடிவுறுத்தல் பகுதி என்ற இரண்டு உற்பத்தி திணைக்களங்களை உடைய தொழிற்சாலை ஒன்றையும், தரக்கட்டுப்பாட்டுப் பகுதி என்ற சேவைத் திணைக்களத்தையும் கொண்டுள்ளது. இவை இரண்டும் இரு வேறு கட்டிடத் தொகுதியில் தொழிற்படுகின்றது.

இவை ஒரு வருட காலத்திற்கான 10000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் தொழிற்படுகின்றது. இதனுடன் தொடர்புடைய அடிப்படைகள் வருமாறு.

	இயந்திரப்பகுதி	முடிவுறுத்தல்	தரக்கட்டுப்பாடு
தளப்பரப்பு (சதுரடி)	800	400	200
ஊழியர் எண்	40	30	10
இயந்திர மணி	4000	1000	-
ஊழிய மணி	1000	5000	-
உற்பத்தி இயந்திர கிரயம்	400000	300000	
தரக்கட்டுப்பாட்டு இயந்திரம்	-	-	80000
மின்மானி வாசிப்பு (KW)	1200	800	400
தரக் கட்டுப்பாட்டு எண்	50	30	-

பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயங்கள் வருமாறு.

விபரம்	தொழிற்சாலை	சேவைத் திணைக்களம்	மொத்தம்
வாடகை	120000	30000	150000
மின்சாரம்	50000	30000	80000
நேரில்கூலி	?	?	80000

மேலதிக தகவல்கள்

1. தரக்கட்டுப்பாட்டு மேந்தலை பொருத்தமான அடிப்படையில் உற்பத்தி திணைக்களங்களுக்கிடையே மீள் பங்கீடு செய்யப்படும்.
2. தொழிற்சாலை இயந்திரம் 10 வருட ஆயட்காலத்தையும், தரக்கட்டுப்பாட்டு இயந்திரம் 8 வருட ஆயுட்காலத்தையும் கொண்டது நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுகின்றது.
3. உற்பத்தி திணைக்களங்கள் பொருத்தமான செறிவை அடிப்படையாக கொண்டு மேந்தலையை உறிஞ்சுகின்றது
4. உற்பத்தி அலகு ஒன்றுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

   நேர் மூலப்பொருள் ரூ 71.00
   நேர்கூலி ரூ 45.00
   பயன்படுத்திய நேரம் - இயந்திரப் பகுதி 15 நிமிடம் (இயந்திரமணி)
   - முடிவுறுத்தல் பகுதி 20 நிமிடம் (ஊழியமணி)
   உற்பத்தியல்லா மாறும் மேந்தலை ரூ 4.00
5. உற்பத்தியல்லா நிலையான மேந்தலை மொத்தம் ரூ 50000
6. விற்பனை விலையில் 25% இலாப எல்லையில் விற்பனை செய்கின்றது.

agaram.lk

வேண்டப்படுவது

1. பகிர்வு அடிப்படையை தெளிவாக காட்டக்கூடிய மேநதலை பகுப்பாய்வு அட்டவணை (இரண்டாம் கட்ட பகிர்வு உட்பட)
2. முடிவுறுத்தல் பகுதியினதும், இயந்திரப் பகுதியினதும் உறிஞ்சுதல் விகிதங்கள்.
3. அலகொன்றின் கிரயம்.
4. அலகொன்றின் விற்பனை விலை
5. 10000 அலகு செயற்பாட்டு மட்டத்தில் இலாபக் கணிப்புக் கூற்று.

(10 புள்ளிகள்)

ஆ) வடமாகாணத்தின் Super Grade பாடசாலை ஒன்று மூன்று நாட்கள் தங்கி நிற்ககூடிய தேசிய கல்விச் சுற்றுலா ஒன்றிற்கு ஏற்பாடு செய்தது. இதில் 300 மாணவர்கள் கலந்துகொள்கின்றனர். ஓவ்வொரு மாணவரிடமும் ரூ 3000 கட்டனம் அறவிடப்படுகின்றது. கல்விச் சுற்றுலாவுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு.

மாணவர் ஒருவருக்கான உணவுச் செலவு (நாளொன்றிற்கு)	ரூ 400.00
மாணவர் ஒருவருக்கான தண்ணீர்ச் செலவு (நாளொன்றிற்கு)	ரூ 100.00
மாணவர் ஒருவருக்கான நுழைவுச்சீட்டு செலவு (3நாட்களுக்கு)	ரூ 200.00
மாணவர் ஒருவருக்கான அடையாள அட்டை செலவு	ரூ 50.00
போக்குவரத்துச் செலவு	ரூ 240000
பதாகை அச்சிடும் செலவு	ரூ 4000
தங்குமிட விடுதி வாடகை (நாளொன்றிற்கு)	ரூ 12000
ஒழுங்கமைத்தல் செலவு	ரூ 20000

கல்விச் சுற்றுலா மூலம் கிடைக்கும் மிகை சிறுவர் இல்லம் ஒன்றிற்கு அன்பளிப்பு செய்வதென தீர்மானிக்கப்பட்டது. ஓவ்வொரு தனி நிலைமையென கருதி

வேண்டப்படுவது

1. மாணவர் ஒருவருக்கான பங்களிப்பு யாது?
2. மொத்தச் செலவை ஈடுசெய்ய கலந்துகொள்வேண்டிய மாணவர் எண்ணிக்கை யாது?
3. ஏல்லா மாணவரும் முழுத்தொகையையும் செலுத்தியிருப்பின் சிறுவர் இல்லத்திற்கு அன்பளிப்பு செய்யக்கூடிய தொகை யாது?
4. பாதுகாப்பு எல்லையை மாணவர் எண்ணிக்கையில் தருக.
5. சிறுவர் இல்லத்திற்கு ரூ 100000 தொகையை அன்பளிப்பு செய்ய வேண்டுமாயின் இக் கல்விச் சுற்றுலாவில் சேர்த்துக்கொள்ள வேண்டிய மேலதிக மாணவர் எண்ணிக்கை எத்தனை?
6. கலந்துகொள்ளும் மாணவளில் 10 மாணவர்களிடமிருந்து தலா ரூ 1000 மட்டும் அறவிடப்பட்டால். சிறுவர் இல்லத்திற்கு அன்பளிப் செய்யக்கூடிய தொகை யாது?

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 03

அ) சாள்ஸ் நிறுவனத்தின் 2019/5/31 இல் முடிவடைந்த மாதத்திற்கான கொடுக்கல் வாங்கலகள் கீழ்வரும் சமன்பாட்டில் தரப்பட்டுள்ளளது.

கொடு.வா	பொறி	இருப்பு	வி.வருமதி	காசு	மூலதனம்	கடன்	வியாபார சென்மதி	நிறுத்தி வைத்த லாபம்
மீதி 1.5	250000	50000	40000	60000	230000	50000	80000	40000
3..5				+10000	+10000			
5.5		+15000		-10000			+ 5000	
8.5			-8000	+6000				-2000
12.5			-2000				-2000	
15.5	+50000					+50000		
18.5		-8000	+20000					+12000
21.5					+5000		-6000	+1000
24.5				-4000		-3000		-1000
28.5				-4000	*-4000*			
31.5		+2000	-5000					-3000

agaram.lk

மேலதிக தகவல்

1) பொறிக்கு 6 % தேய்விடப்பட்டது
2) கடன்பட்டோர் நேரடிவைப்பு ரூ 10000
3) மே மாத நிலையியற்கட்டளை வாடகை ரூ 2000 அட்டுறு மின்சாரம் ரூ 1000
4) 31.5 இல் உள்ள இறுதிக்கடன்பட்டோரில் 4% எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கம் செய்க.
5) மாற்றப்படாத காசோலை ரூ 4000 வசூழிக்கப்படாத காசோலை ரூ 8000

வேண்டப்படுவது :-

1) முதல் 10 கொடுக்கல் வாங்கல்களையும் விபரிக்குக.
2) மே மாத தேறியலாபத்தை வருமானக்கூற்றின் மூலம் கணிக்குக.
3) மே மாத திருத்திய காசுக் கட்டுப்பாட்டு கணக்கும் வங்கிக் கணக்கிணங்க கூற்றும்.

(14 புள்ளிகள்)

ஆ) வரையறுக்கப்பட்ட காதீஸ் கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு 36500 ஆகவும் பட்டியலமீதி 57000 ஆகும். காரணங்கள் வருமாறு.

1) மறுக்கபட்ட காசோலை 4200 பொதுப்பேரேட்டில் உள்ள கணக்குகளில் பெற்ற காசோலையாக பதிவிடப்பட்டது
2) காசுக் பெறுவனவு நாளேட்டில் உள்ள கழிவு நிரல் 2000 ஆல் கூட்டிக்கூட்டப்பட்டது.
3) அனுமதித்தபடி 1300 கடன்பட்டோன் பேரேட்டில் 3100 என வரவிடப்பட்டது.
4) எதிர்மாற்றல் 2500 கட்டுப்பாட்டுக்கணக்கில் 5200 என பதியப்பட்டது.
5) காசுவிற்பனை 3000 கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசாக கருதி கடன்பட்டோன்பேரேட்டில் பதியப்பட்டது.
6) வருமதிகளின் மதிப்புக் குறைவு நட்டம் 3000 கடன்பட்டோன் பேரேட்டில் வரவிடப்பட்டது

வேண்டப்படுவது:

1) திருத்தப்பட்ட கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு
2) திருத்தப்பட்ட கடன்பட்டேன் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியை கடன்கட்டோன் பேரேட்டுப்பட்டியல் மீதியுடன் கணக்கிணக்கம் செய்யும் கூற்று.

(6 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 04

1.3.2019 இல் ரூ 300000 தொகையை மூலதனமாக இட்டு ஆரம்பிக்கப்பட்ட சாது நிறுவனத்தின் மார்ச் மாதத்திற்கான காசுக் கட்டுப்பாட்டு கணக்கின் சுருக்கம் வருமபறு

காசுப் பெறுவனவு

மூலதனம்	300000	
காசு விற்பனை	124000	
கடன்பட்டோரிடம் பெற்றது	146000	
விற்பனைக்காக பெறப்பட்ட முற்பனம்	45000	615000

காசுப் கொடுப்பனவு

மூலப்பொருள்கொள்வனவு	ரூ 85000	
கடன்கொடுநருக்கான கொடுப்பனவு	ரூ 115000	
நேர்கூலி	ரூ 24000	
மூலப்பொருள் கொள்வனவுக்கான முற்பனக்கொடுப்பனவு	ரூ 60000	
விநியோகச் செலவு	ரூ 8000	
தொழிற்சாலை வாடகை	ரூ 12000	
தொழிற்சாலை மின்சாரம்	ரூ 10000	
15..3..2019 பொறி இயந்திரக்கொள்வனவு	ரூ80000	(394000)
31.3.2019 மீதி		**221000**

ஏனைய தகவல்கள்

1) மார்ச் மாதத்திற்கான மூல ஏடுகளின் மொத்தம் வருமாறு
மூலப்பொருள் கொள்வனவு ரூ 150000
விற்பனை நாளேடு ரூ 162000
உட்திரும்பல் நாளேடு 4000
வெளித்திரும்பல் நாளேடு 5000

agaram.lk

2) 31.5.2019 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு செலுத்தப்பட்ட தொகையை வாடகை குறிக்கும்.
3) முற்பன விற்பனை தொடர்பில் இம் மாதத்தில் ரூ 30000 பெறுமதியான பொருட்கள் மாத்திரம் வழங்கப்பட்டதுடன் மூலப்பொருள் முற்பனக்கொடுப்பனவில் ரூ 50000 மூலப்பொருட்கள் மாத்திரம் இம்மாதத்தில் பெறப்பட்டது.
4) பொறியின் இழிவுப் பெறுமதி ரூ 8000 பயனுள்ள ஆயட்காலம் 6 வருடம்
5) மார்ச் மாதத்திற்காக ஏப்பரல் 10ம் திகதி கிடைக்கப் பெற்ற மின்சாரப்பட்டியல் ரூ 12000
6) கடன்பட்டோரிடம் பதிவளித்த தொகை ரூ 6000
7) 31.3.2019 இல் மீதிகள்
   மூலப்பொருள் ரூ 48000
   முடிவுப்பொருள் ரூ 36000
   குறைவேலை ரூ 18000

வேண்டப்படுவது

1. பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்
   விற்பனை கணக்கு, மூலப்பொருள் கொள்வனவுக் கணக்கு கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு முற்பன விற்பனை பெறுவனவு கணக்கு, முற்பன மூலப்பொருள் கொடுப்பனவு கணக்கு
2. 2019 மார்ச் மாதத்திற்கான உற்பத்திக் கிரயக் கூற்று
3. 2019 மார்ச் மாதத்திற்கான வருமானக்கூற்று
4. 31.3.2019 இல் நிதி நிலைமைக்கூற்று

(20 புள்ளிகள்)

வினா இல 05

அ) வரையறுத்த அப்ரோட் கம்பனியின் 31.3.2019, 31.3.2018 இல் உள்ள மீதிகள் வருமாறு

	31.3.2019		31.3.2018	
	ரூபா 000		ரூபா 000	
ஆதனம்பொறி உபகரணம் கிரயம்/ம.பெ	24200		23000	
தேய்மான ஒதுக்கம்	(2900)	21300	(3000)	20000
இருப்பு		5000		4000
வியாபார வருமதி		2000		3000
காசு		6700		6600
		35000		**33600**
கூறப்பட்ட பங்குமூலதனம் (பங்கொன்று ரூ 10)		21000		20000
நிறுத்திவைத்த லாபம்		7000		6000
குத்தகை கடன்கொடுநர்		4000		5500
மறுமதிப்பீட்டு ஒதுக்கம்		200		-
பொது ஒதுக்கம்		1800		1200
சென்மதி நிர்வாகச் செலவு		300		200
வரிச் சென்மதி		300		400
வியாபரச் சென்மதி		400		300
		35000		**33600**

agaram.lk

மேலதிக தகவல்கள்

1. 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் ரூ 2500 000 இவ்வாண்டுக்கு மதிப்பிடப்பட்ட வரி ரூ 500 000 சென்ற நியாண்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வரி முழுவதும் இவ்வாண்டு இணங்கப்பட்டு செலுத்தப்பட்டது.
2. இவ்வாண்டு காணி ரூ 1000 000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டது. இக்காணி சென்றாண்டு ரூ 800 000 ஆல் குறைத்து மீள்மதிப்பிடப்பட்டது.
3. பொறி ஒன்று ரூ 50000 இலாபத்தில் விற்கப்பட்டது. இது விற்கப்பட்ட தினத்தில் இதன் முன்கொண்டுவரும் தொகை ரூ 1500 000 ஆகும். ஆதனம் பொறி உபகரணத்தின் ஆண்டுப் பெறுமானத் தேய்வு ரூ 200 000 இவ் ஆண்டில் மேலும் ஒரு தொகுதி மோட்டார் கொள்வனவு செய்யப்பட்டது.

4. இவ்வாண்டுக்கான குத்தகை வட்டி ரூ 300 000 இது இவ்வாண்டு தவனைக் கட்டனத்துடன் சேர்த்து செலுத்தப்பட்டது.
5. இவ்வாண்டு இறுதியில் ஒவ்வொன்றும் ரூ 10 விலையான 50000 பங்குகள் நிறுத்திவைத்த லாபத்தை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது. இது இவ்வாண்டு பங்குலாபத்திற்கு உரித்துப் பெறமாட்டாது. இவ்வாணடில் ஒரு பகுதி பங்குலாபம் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது

LKAS 7 இன்படி 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(15 புள்ளிகள்)

ஆ) மேற்படி தரவுகளை அடிப்படையாககொண்டு 31.3.2019 இல் முடிவடைந் நிதியாண்டுக்கான பின்வரும் கணக்கீட்டு விகிதங்கள்

1. வட்டிக்காப்பு விகிதம்
2. பங்கொன்றிற்கான உழைப்பு விகிதம்
3. பங்கொன்றிற்கான பங்குலாபம்
4. உரிமை முதல் மீதான திரும்பல் வீதம்
5. கடன் உரிமை விகிதம்

(5 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 06

அ) ரமனி, மதனி, ராகினி என்போர் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பங்குடைமையை நடாத்துகின்றனர்.

- எல்லாப்பங்காளலுக்கும் ஆரம்ப மூலதனமீதி மீது 10% வட்டி
- இலாபநட்டங்கள் முறையே 5:3:2
- ரமனிக்கும் மதனிக்கும் ஆண்டுச் சம்பளம் முறையே ரூ 240000, ரூ 120000

பங்குடைமையின் 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமானது ரூ 4800000 ஆக இருந்தது. எனினும் அதனைத்தொடர்ந்து கணக்கீட்டு பதிவுகளில் பின்வரும் வழுக்கள் வெளிக்கொண்டுவரப்பட்டது.

1. மின்சாரத்திற்கு செலுத்திய ரூ 240000 ஆனது மின்சாரக்கணக்கில் ரூ 420000 ஆக வரவுவைக்கப்பட்டுள்ளது.
2. வங்கிக்கடனுக்கு செலுத்திய வட்டி ரூ 200000 ஆனது வட்டி வருமானக் கணக்கில் ரூ 20000 ஆக செலவு வைக்கப்பட்டுள்ளது.
3. 1..10.2018 இல் ரூ 400000 கொள்வனவுசெய்யப்பட்ட காரியாலய உபகரணம் காரியாலய செலவுக்கணக்கில் ரூ 40000 ஆக பதியப்பட்டுள்ளது. (காரியாலய உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% தேய்விடப்படும்)
4. மதனியின் ஆயுள்காப்புறுதி செலவினம் ரூ 250000 ஆனது பங்குடைமையினால் செலுத்தப்பட்டதுடன் இது நிறுவன காப்புறுதிச் செவாக பதியப்பட்டது.
5. கடன்பட்டோரிடம் பெற்று வங்கியிலிடப்பட்ட ரூ 400000 காசோலை மறுக்கப்பட்டது. இவை முழுவதும் மதிப்புக் குறைவு நட்டமாக பதிவளிக்கப்பட்டது. இது பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை

31.3.2019 இல் ராகினி பங்குடைமையிலிருந்து இளைப்பாறினார் இத்திகதியில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ 2000000 ஆக மதிப்பிடப்பட்டது கணக்குப்புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு சீராக்கப்படுவதில்லை எல்லாச் சீராக்கங்களும் மூலதனக்கணக்கினூடாக சீராக்கப்படல் வேண்டும். ராகினினிக்கு செலுத்தவேண்டிய தொகை பங்குடைமைக்கு கடனாக பராமரிப்பதற்கு இனங்கப்பட்டுள்ளது. ரமனியும் மதனியும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர சம்மதித்தனர்.

1.4.2018 இல் உள்ள பங்காளர் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள்

	மூலதன கணக்கு 000	நடைமுறை கணக்கு000
ரமனி	4000	800
மதனி	3000	600
ராகினி	2000	(200)

வேண்டப்படுவது

1. 31.32019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சரியாலாபத்தைக் காட்டும்கூற்று
2. இலாபநட்ட பகிர் கணக்கு
3. 31.3.2019 இல் உள்ளவாறான பங்காளர் மூலதன நடைமுறைக் கணக்குகள் (10 புள்ளிகள்)

ஆ) தியாகி விளையாட்டுக்கழமானது 12 அங்கத்தவர்களுடன் 1.4.2017 இல் உருவாக்கப்பட்டது. அதேதினத்தில் நன்கொடையாக ரூ 200000 பெறுமதியான மோட்டார் கார் பெறப்பட்டது அங்கத்தவர் ஒருவருக்கான ஆண்டுச் சந்தா ரூ 500

அங்கத்தவர் பதிவுப்புத்தகம் சுருக்கம்

அங்கத்தவர்	அங்கத்தவர் எண்	31.3 இல் சந்தா செலுத்திய அங்கத்தவர்	
		2017/2018	2018/2019
கழகத்தை உருவாக்கியவர்	12	12	12
2017/2018 இல் சேர்ந்துகொண்டவர்	40	35	26
2018/2019 இல் சேர்ந்துகொண்டவர்	20	-	14

மேலதிக தகவல்கள்

1) 2017/2018 இல் சேர்ந்துகொண்ட அங்கத்தவர்களில் 10 அங்கத்தவர்கள் 2018/2019 வருட ஆரம்பத்தில் விலகினர். இவர்களில் 5 பேர் சென்றாண்டு சந்தாவை செலுத்தாதவர்கள்
2) 2018/2019 இல் சேர்க்கொண்ட அங்கத்தவர்களில் 8 பேர் அடுத்தாண்டுக்கான சந்தாவையும் இவ்வாண்டு செலுத்தியிருந்தனர்.
3) நன்கொடையானது 10 வருடங்களுக்கு சமனான பங்கிடப்படும்
4) 2017/2018 ஆம் ஆண்டுக்கான ஏனையவருமானம் (நன்கொடை நீங்கலாக) ரூ 124000, மொத்தச் செலவு ரூ 98500 (பெறுமானத்தேய்வு நீங்கலாக)
5) மோட்டார் வாகனம் 10 வருட ஆயுளைகொண்டது.
6) 31.3.2019 இல் காசு மீதி ரூ 175000
7) கழகத்தில் வேறுசொத்துப் பொறுப்பு இல்லை

வேண்டப்படுவது

1) 2017/2018 ஆம் ஆண்டுக்கான மிகை
2) 2018/2019 ஆம் ஆண்டுக்கான சந்தாக் கணக்கு
3) 31.3.2019 இல் திரண்டநிதி

(5 புள்ளிகள்)

agaram.lk

இ) வரையறுத்த சைனிஸ் கம்பனியொன்று தன்னிடமுள்ள பழைய இயந்திரத்திற்கு பதிலாக புதிய இயந்திர மொன்றை பதிலீடு செய்ய விரும்புகின்றது.

1) செயற்திட்டத்தின் தொடக்கத்தில் பின்வரும் காசப்பாச்சல் இடம் பெற்றது.

இயந்திர (கொள்விலை)	ரூபா	300000
கொள்வனவு செலவு	ரூபா	55000
நிர்மானச் செலவு	ரூபா	25000

தற்போதுள்ள பழைய இயந்திரத்தை அகற்றும் போது அதன் பெறுமதி ரூபா 30000

2) பெறுமானத்தேய்வு உட்பட செயற்பாட்டு காசுப்பாச்சல்

வருடம்	1	2	3	4
விற்பனையில் எதிர்பார்க்கும் அதிகரிப்பு	420000	475000	555000	625000
செயற்பாட்டுச் செலவில் எதிர்பார்க்கும் அதிகரிப்பு (பெறுமானத் தேய்வு உட்பட)	380000	410000	450000	560000

3) ஏனைய தகவல்கள்

புதிய இயந்திரத்தின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 75000 இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற்படு மூலதனத்தின் தேவைப்பாடு ரூபா 60000 இருந்து ரூ 80000 ஆக அதிகரித்ததுடன் இது செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் இடம்பெறும் மேலும் எல்லா தொழிற்படு மூலதனம் செயற்திட்ட இறுதியில் தேறும். கழிவிடல் காரணிவீதம் 10% ஆகும்.

தேவைப்படுவது.

1) செயற்திட்டத்தின் ஆரம்ப தேறிய காசப்பாச்சல்

2) ஒவ்வொரு ஆண்டுக்குமான தேறிய செயற்பாட்டு காசப்பாச்சல் கூற்று

(5 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)